விலைவாசிகள் உயர்வை தடுக்க முடிந்ததா?

(o)

வடநாட்டு வணிகர்கள் கொள்ளைக்கு முடிவில்லையா?

(0)

அரசாங்கம் என்ன செய்கிறது?

கல்கத்தா, டிச. 11—

நாட்டிலே விலைவாசிகள் நஞ்சுபோல் ஏறிக்கொண்டிருக்கிறது. ஆனால், விலைவாசிகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாக அரசாங்க நிதியமைச்சர் கூறுகிறார்.

கள்ளச்சந்தை வாணிகத்தைத் தடைசெய்யக் கடும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்கிறார் நிதியமைச்சர். ஆனால் நாட்டிலே காணப்படும் காட்சி கள்ளச்சந்தை தலைவிரித்தாடிக்கொண்டிருக்கிறது.

ஆகவே, நாட்டையாளும் அமைச்சர்கள் பேச்சுக்கும் நாடு நடைபெறும் நிலைமைக்கும் சற்றும் தொடர்பு இருப்பதாகவே தெரியவில்லை. அமைச்சர்கள் எதையோ சொல்லிக்கொண்டு மக்கள் மனம் திருப்தியடையுமாறு செய்ய முயல வேண்டியுது. நடவடிக்கையிலோ மக்கள் வாழ்க்கை படுபாதாளத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இதுதான் இன்று அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்குமிடையுள்ள தொடர்பாகும்.

நாட்டிலே நாளுக்கு நாள் விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகின்றன. எந்தப் பொருளானாலும் சரி, வெளிநாட்டிலிருந்து வருபவையேனும், அல்லது உள்நாட்டில் விளையும் பொருளேனும் விலைகள் உயர்வதில் எந்தவிதமான தடையுமில்லை.

இவ்வாறு நாளுக்குநாள் விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போகின்றனவே ஒழிய, மக்களின் வாங்கும் சக்தி உயரமுடியவில்லை. பண நடமாட்டம் சுருங்கிவிட்டிருப்பதால், வாங்கும் சக்தி மக்களிடத்தில் குறைந்து, நாட்டிலே பஞ்சமும் வறுமையும் தலைவிரித்தோங்குகிறது.

நிலைமை இவ்வாறு நாளுக்குநாள் மோசமாகிக்கொண்டே சென்றும் அரசாங்கம் இதில் தலையிட்டு ஆவனசெய்ய முன்வராதிருப்பது பெரிதும் விந்தையான செயலாயிருக்கிறது.

துவரை, மொச்சை, காராமணி, முதல் மிளகாய், மல்லி, மஞ்சள் வரை வடநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. ஒரு காலத்தில் உலகத்திற்கு மிளகு சப்ளை செய்துவந்த தமிழ்நாடு, இன்று மிளகையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யவேண்டியிருக்கிறது.

இவை தவிர, இன்னும் பலவகையான வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களெல்லாம் வடநாட்டு முதலாளிகள் அனுப்பிவைக்கவேண்டியவைகளாகவே இருக்கின்றன. எனவே, அவ்வடநாட்டார் மனம்போனபோக்கில் விலைவாசிகளை உயர்த்திவிடுகின்றனர்.

மேலும் இன்னொரு தந்திரமும் கையாளப்படுகிறது. பெரிய வணிகர்கள் நாடு முழுவதும் சரக்கு வெளிப்படாமல் முடக்கிவைத்து சரக்குப்பஞ்சம் ஏற்படச்செய்து, பின் திடீரென்று உயர்ந்த விலையில் அச்சரக்கை வெளியே விடுகின்றனர்.

இவ்வாறு வணிகர்கள் செய்யும் தந்திரங்கள் ஒன்றிரண்டல்ல; பல! ஆனால் அரசாங்கம் இது குறித்துச் சிறிதும் கவலைப்படவேயில்லை. அப்போதைக்கப்போது சில மந்திரிகள் மழை பெய்யாமையால் இக்குறை ஏற்பட்டிருப்பதாகக் கூறுவதும்சிலர்விரைவில் நாடு 'சுபிட்சப் பாதை'யை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதாகவும் கூறிச்செல்வதைத் தங்கள் தொழிலாகக் கொண்டுவிட்டிருக்கின்றனர்.

இந்திய அரசாங்க நிதி அமைச்சர் தேஷ்முக் கல்கத்தாவில் திங்களன்று பேசியபோது, "கூடியவரையில் விலைகளைக் கட்டுத் திட்டம் செய்துவைத்திருப்பதே அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகிறது" என்று கூறினார். நாட்டின் நிலைமைக்கும் இவர் கூற்றுக்கும் சற்றேனும் பொருத்தமிருக்கிறதா என்பதைப் பாருங்கள்.

அவர் மேலும் கூறுகையில், "சென்ற ஆண்டு ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டபோது, உணவு தானியங்கள், நூல், துணி, இரும்பு, உருக்கு முதலியவற்றின் விலை குறைக்கப்பட்டது. உணவு விலை 3 முதல் 15 சதவிகிதம் குறைக்கப்பட்டது. ஆனால் கொரியா போர் காரணமாக விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. எனினும், போர் துவக்கப்பட்டவுடன், அத்தியாவசியப் பொருள்களின் சப்ளைச் சட்டம் இயற்றப்பட்டது. உணவு தானியப் பதுக்கலுக்குக் கடுந் தண்டனைகள் ஏற்பாடாயின. வாணிபம், உற்பத்தி, விநியோகம் பற்றிச் சட்டமியற்றும் அதிகாரத்தை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டது. பண்டங்களின்சப்ளைபற்றிய அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. விலைவாசிஆலோசனைபோர்டு நியமிக்கப்பட்டது."

இவ்வளவும் செய்யப்பட்டதாம் மத்திய அரசாங்கத்தாரால் நிதியமைச்சர் தேஷ்முக் கல்கத்தாவில் மிக அழகாகப் பேசியிருக்கிறார். மத்திய அரசாங்கம் செய்திருப்பதாகக் கூறுபவைகள் அனைத்தும் ஏட்டிலிருக்கலாம். ஆனால், நம் நாட்டு நிலைமை என்ன? நம்நாட்டிலே முன்னைவிட விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. மக்கள் வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடிக்கொண்டிருக்கின்றனர். இதுதான் மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கையின் பலன்.

Regd: No. M. 5458 | Phone No. 4502:

விலை அரை அணா | இலங்கை 5 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 13—12—50 | மணி 11

பெண் கல்வியை வளர்க்கும் முறை இதுதானா!

தனிப்பட்ட முறையில் பெண்கள் உயர்கல்வி பெற வழியில்லை

(:0:)

தனியே படிக்க இணங்கினால் கலாசாலைகள் நிலைக்காவாம்

சென்னை, டிச. 11—

சென்னைக் கல்வித்துறை அறிஞர் ஒருவர் மதுரையில் பேசியபோது, "பெண்கள் தனித்த முறையில் கல்வி பயின்று தேர்வுக்கு அமர இணங்கினால், சில செல்வந்தர் வீட்டுப் பெண்கள் மட்டுமே இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். இப்போது பல கல்லூரிகள் மூலம் நடுத்தர நிலையிலுள்ள வீட்டுப் பெண்கள் படித்துப் பலன் பெறுவது பறிக்கப்படும். இவ்வாறு பல பெண்கள் தனித்த கல்வி மூலம் பயன் பெறுதலும் முடியாது" என்று கூறினாராம்.

இந்த வாதம் மிகவும் விசித்திரமானதாகவே இருக்கிறது. கல்லூரியில் சேர்ந்துபடிக்க வசதியுடையப் பெண்கள் மட்டும்தான் கல்லூரியிற் சேரமுடியும். வசதியற்ற பெண்கள் வீட்டிலிருந்தவாறே படித்துத் தேர்வில் சம வசதியளிக்க வேண்டுமென்றால், இந்த வசதி பணக்காரர்களுக்குத்தான் பயன்படுமென்று கூறுவதில் பொருள் இருக்கிறதா?

தனிப்பட்ட டாக்டர்கள் வைத்தியம் செய்ய விடுவதால், சில பணக்காரர்கள் மட்டுமே அதனால் பயனடைதல் கூடுமாகையால். புதிய ஆஸ்பத்திரிகள் திறப்பதற்கு அது பாதகமாக இருக்கும். இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற முடியாமற் போகும் எனக்கூறி, தனிப்பட்ட முறையில் வைத்தியம் செய்யும் டாக்டர்களே இருக்கக் கூடாதென்று கூறும் வாதம் எப்படிப் பொருந்துமோ அப்படித்தானிருக்கிறது இந்தக் கல்வித் துறையறிஞர் வாதமும்.

கல்வி பரவியில்லாத நாட்டிலே நம் கல்வியறிஞர்களின் அறிவுக் கூர்மை எழ்வாறெல்லாம் போகிறதென்பதைப் பாருங்கள்! இப்படிப்பட்டவர்கள் தலைமைப் பீடங்களில் இருப்பதால் நாட்டின் கதி இங்ஙனமிருக்கிறது. நாட்டிலே, எந்த வயதினரும் ஆண்களும் பெண்களும் எப்போது வேண்டுமானாலும் பல்கலைக் கழகப்பாடத் திட்டப்படி பல்கலைத் கழகத் தேர்வில் அமர்ந்து படித்தவர்களாகலாம் என்றல்லவோ நம் நாட்டில் விதியிருக்க வேண்டும். இப்படி விதி செய்வதால் பல்கலைக் கழகத்திற்கு என்ன நஷ்டமோ!

ஆஸ்லோநகர் பாதுகாப்பு

நார்வேயின் தலைநகரான ஆஸ்லோவின் மத்ய பகுதியில் 4000 பேர் தங்கும்படியான ஒரு பாதுகாப்புக் குகை கட்டப்படவிருக்கிறது. இதை கார்களின் காரேஜ் மாதிரியும் உபயோகிக்க முடியுமாம்.

மாலைமணி

சென்னை 13—12—50 புதன்கிழமை

பொறுப்பற்ற தொழிலோ ?

சென்னைச் சட்ட சபைக்குப் பொது மக்களால் தேர்ந்தெடுக்ப்பட்ட அங்கத்தினர்கள் சட்டசபை வேலையை இனமாகச் செய்யவில்லை. மாதச் சம்பளம் வேறு. ஆளுக்கு 250 ரூபாய் கிடைக்கிறது. சபைகூடும் நாட்களில் படி வேறு. ஆக இவ்வாறெல்லாம் சட்டசபை அங்கத்தினர் பதவி நல்ல வருமானத்திற்குரியதொன்ருக ஆகிவிட்டிருக்கிறது.

ஆனால், இவ்வாறு அரசாங்கத்திடமிருந்து சம்பளம் பெற்றும், படி பெற்றும் சட்டசபை உறுப்பினர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்வதாகத் தெரியவில்லை.

சட்டசபையில் முக்கியமான மசோதாக்கள் வருவது ஒரு புறமிருக்கட்டும். கேள்விகள் கேட்கும் வாய்ப்பு சட்டசபை நடவடிக்கைகளில் ஒரு முக்யமான பகுதியாகும். கேள்வி கேட்கும் வாய்ப்பினல், அரசாங்கத்திடமிருந்து பல உண்மைகளையும் மக்களுக்குத் தேவைப்படும் பல செய்திகளையும் அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

ஆனல், இப்போதுள்ள சட்டசபையில் என்ன நடைபெறுகிறது? கேள்விகள் கேட்கப்படுகின்றன. ஆனல் அங்கத்தினர்கள் விடைக்காகக் காத்திருப்பதில்லை. சபை நடவடிக்கைகள் நடைபெறக் "கோரம்" வேண்டுமென்பதைப் பற்றியும் அங்கத்தினர்கள் கவலை கொள்வதில்லை.

அவர்கள் சபைக்கு வந்துவிட்டதாக " ஆஜர் " கொடுத்துவிட்டுத் தங்களுக்கு ஆகவேண்டிய வேலைகளைக் கவனிப்பதில் இந்த அங்கத்தினர்களுட் பெரும்பாலோர் இறங்கிவிடுகின்றனர்; ஒரு சிலர் மட்டுமே பொறுப்புணர்ந்து சபையில் அமர்ந்திருக்கின்றனர்.

சபையில் வாதங்கள் நடைபெறும்போது விடுபட்டுப் போகும் விஷயங்கள் பல, கேள்வி நேரத்தில் வெளியிடப்பட்டு விளக்கமடைவதுதான் சட்டசபைகளின் கேள்வி நேரத்தினல் ஏற்படக் கூடிய பலன் என்பதைக் கேள்வி கேட்கும் காங்கிரஸ் அங்கத்தினர்களே உணர்வதில்லை.

இவ்வாறு சட்டசபையில் வேலை நடைபெறக்கூடிய அளவு கூட அங்கத்தினர்கள் வாராது போவதற்குக் காரணம் என்னவென்பது குறித்து அரசாங்கமும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. எனவே, கேட்பாரற்ற நிலையில் இவர்கள் மனம்போல வருவதும் போவதுமாகச் சட்டசபையைத் தங்கள் விருப்பப்படி நடத்துவதற்கேற்ற இடமாக ஆக்கிவைத்துக் கொண்டிருக்கின்றனர் என்றே கருத வேண்டியிருக்கிறது.

சட்டசபைகூடும் நேரம் அங்கத்தினர்கள் வந்து கூடுவதற்குத் தக்க நேரமில்லை என்று கூறினல் ஒருவாறு காரணம் பொருந்துவதாக இருக்கலாம். ஆனல் அப்படியுமில்லை. எல்லாரும் வந்து ஒன்று கூடுவதற்குறிய நேரமாகப் பார்த்தே சபை கூடுகிறது. அப்படியிருந்தும் அங்கத்தினர்கள் வராமற்போவதுதான் அவர்களுடைய பொறுப்புணர்ச்சியை விளக்க வல்லதாயிருக்கிறது.

இவ்வாறு சட்டசபை பொறுப்பில்லா வகையில் நடைபெறுவதற்குக் காராணம் அங்கு ஒரே கட்சியினர் இருப்பதுதான். ஒரே கட்சியினர் இருப்பதால் சபை வகையற்ற நிலையில் பொறுப்பற்ற வகையில் வரும் அங்கத்தினர்களுடையதாக அமைந்துவிட்டிருக்கிறது. அங்கத்தினர்களுக்கும் தத்தம் வருவாயில் அக்கரை உடையவர்களாக இருக்க வேண்டுமென்பதில் ஏற்படும் உற்சாகத்தைப் போன்று. சபையில் அமர்ந்து செயலாற்றுவதற்குச் சம்பளம் வாங்குகிறோமே என்ற எண்ணம் ஏற்படுவதில்லை.

எனவே இவ்வாறு நாட்டின் பார்லிமெண்ட் சபை சோம்பலிற் காலங்கழிக்கக் கூடியவாறு ஆக்கப்படுவதற்குக் காரணம் அதன் நடவடிக்கைகளில் அக்கரை கொள்ளாத அங்கத்தினர்களே என்பதைப் பொது மக்கள் நன்கு கவனித்து மனத்தில் பதிய வைக்க வேண்டும்.

அடுத்துவரும் தேர்தலிலேனும் இவ்வாருன கூட்டத்தைச் சட்டசபைக்கு அனுப்பி வைத்துவிடாமல் பொது மக்கள் எச்சரிக்கையாக இருத்நல் வேண்டும். மீண்டும் மீண்டும் இத்தகையவர்களே சட்டசபைக்கு வருகின்ருர்கள் என்ருல், நாட்டின் நிலைமை இன்றுள்ளதைப் போன்றதாகத்தான் இருக்குமே யொழிய ஒரங்குலமும் முன்னேற்றப் பாதையில் செல்லாது என்பதை இப்போதைய அனுபவங்களைக்கொண்டு பொது மக்கள் மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும்.

வாலாஜாவில் 'வேதனைக்குரல்'

சிதைந்த வாழ்வின் சோகசித்திரம் !

நேசவாளி பிச்சைக்கராகும் கோரம் !

வாலாஜா, டிச. 10—

சென்னையை அடுத்த வாலாஜா பாத் நகரிலுள்ள ராஜா தியேட்டரில் மறுமலர்ச்சி நாடக மன்றத்தாரால் "வேதனைக்குரல்" என்னும் நாடகம் 9-12-50 இரவு நடைபெற்றது. கதை வசனம் தோழர் மு. கருணநிதி அவர்களால் எழுதப் பட்டது. இந்நாடகத்தில் தோழர்கள் மு. கருணநிதி, புலவர் குழந்தையா, கவிஞர் கண்ணதாசன், ஈழத்தடிகள், தில்லை வில்லாளன், சி. வி. எம். அண்ணமலை, கே. டி. எஸ். மணியம், சே. கோ. பெருமாள், வெ. சம்பந்தம், அரங்கண்ணல் மற்றும் பலர் தோன்றி நடித்தார்கள். நாடகத்திற்கு மாவட்டத்தின் எல்லா பகுதிகளிலிருந்து கழக பிரமுகர்களும், கழகத் தோழர்களும்வந்திருந்தனர். நாடக அரங்கில் இடங்கொள்ளாமல் அநேகர் வீடு திரும்பவும் நேரிட்டது.

நாடகம் எல்லாவகையிலும் காண்போர் கண்களைக் கவர்ந்தது. பார்ப்போர் மனதை கொள்ளை கொண்டன. நாடகத்தில்தோன்றிய எல்லா பாத்திரர்களும் மிக சிறப்பாகவே நடித்தார்கள். இந் நாடகம் நாட்டின் எல்லா பாகங்களிலும் நடைபெற வேண்டுமென யாவரும் நினைத்தனர். நாடகத்தில் நாட்டின் தற்கால நிலை நன்கு சித்தரிக்கப் பட்டிருந்தது. நாடகத்திற்கு நமது அண்ண அவர்களும் வாலாஜாபாத் பஞ்சாயத் போர்டு தலைவர் டபிள்யு கே. தேவராஜன் மற்றும் பலரும் வந்திருந்தனர். நாடக முடிவில் மறுமலர்ச்சி நாடக மன்றத்தார் நமது அண்ண அவர்களிடம். குன்றத்தூர் வழக்கை நடத்த நன்கொடையாக ரூ 1000 கொண்ட பண முடிப்பு அளிக்கப்பட்டது. அண்ண அவர்கள், பண முடிப்பளித்த மன்றத்தாருக்கு நன்றி கூறி நடித்தவர்களைப் பாராட்டியும், நாடகத்திற்கு பெருவாரியாக வந்திருந்த பொதுமக்களுக்குத்தனதுநன்றியை தெரிவித்துக் கொண்டார். மன்றத்தாரால் நன்றிகூற நாடகம் இனிது முடிவு பெற்றது.

ஸியோலைக் காலி செய்ய தென்கோரியர் ஆயத்தம்

சீனப் படை 38-வது அக்ஷ ரேகையைத் தாண்டி தென்கொரியாவில் பிரவேசிக்கும் பட்சத்தில் ஸியோல் நகரையே காலி செய்துவிட தென்கொரியர்கள் இப்போது முதற்கொண்டே ஆயத்தம் செய்து வருகின்றனர் என்று இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

அறப்போர்

திருப்பத்தூர், டிச. 16—

17-12-50 ஞாயிறு மாலை 6மணிக்கு பாஞ்சாலை மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் தி.மு. க. சார்பில் நடைபெறும்.அதில் தடைசெய்யப்பட்ட புத்தகங்களைப் படித்துவிளக்கிப் பேச முடிவு செய்யப்பட்டது.

ட்ருமன்-ஆட்லி பேச்சில் இன்னும் பரம ரகசியம்

லண்டன், டிச. 12—

பிரஸிடெண்ட் ட்ருமன், பிரதமர் ஆட்லி இவர்களிடையே பேசப்பட்டு முடிவு செய்யப்பட்ட விஷயங்களில் சில இன்னும் இரக்சியமாகவே இருந்துவருகிறதென்று இங்குள்ள ராஜதந்திர விமர்சகர்கள் கூறுகிருர்கள். இவை வெளிவராமலேயே இருந்துவிடக்கூடும் என்று இவர்கள் கருதுகிருர்கள்.

கொரியாவிலிருந்து ஐ. நா. படைகள் நிர்ப்பந்தமாக வாபஸ்பெற நேர்ந்தால் என்ன செய்வதென்பது குறித்து ட்ருமன் ஆட்லி முடிவு செய்திருக்கவேண்டும் என்றும் இது முக்ய ராணுவ ரகசியமாக இருந்துவருவதாகவும் இவர்கள் நம்புகிருர்கள்.

பிரிட்டன் யுனைடெட் ஸ்டேட்ஸுக்குமிடையே மிகவும் சௌஜன்ய உறவு ஏற்பட்டிருக்கிறதென்றும் இந்த நல்லுறவை முறிக்க யாராலும் முடியாது என்றும் ஒயிட்ஹால் வட்டாரங்கள் கூறுகின்றன.

பிரிட்டிஷ் ராணுவ விமானப்படை விஸ்தரிப்பு

லண்டன், டிச. 12—

பிரிட்டிஷ் ராணுவமும் விமானப் படையும் விரிவடைந்திருக்கின்றன. அக்டோபர் 1-ந்தேதிக்குப் பின் ராணுவத்தில் 10800 பேர்களும் விமானப்படையில் 5000 பேர்களும் சேர்ந்திருக்கின்றனர்.

பீரதமர் மீது நம்பிக்கையில்லை

பெங்களூர், டிச. 12—

மைசூர் காங்கிரஸ் சட்டசபை கூட்டம் 27-12-50 நடைபெறும். பிரதம மந்திரி தோழர் கே. சி. ரெட்டியார் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானம் 35 மெம்பர்கள் கையொப்பமிட்டு பிரதமரிடம் கொடுக்கப்பட்டதாகவும் அதை மேற்படி தேதியில் நடைபெறும் கூட்டத்தில் யோசிக்கப்படுமென தெரிகிறது.

சி. என். அண்ணதுரை

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சி. என். அண்ணதுரை அவர்களின் சுற்றுப் பிரயாணம் பின் வருமாறு:—

16—12—50 குறிஞ்சிப்பாடி
17—12—50 திருச்செங்கோடு
18—12—50 பவானி

முதலிய இடங்களில் தனது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு 19—12—50 சென்னை திரும்புவார்.

பரம ஏழைக்குக் கிடைத்த பணமுடிப்பே கம்யூனல் ஜி. ஓ.

(o)

நலிந்துள்ள திராவிட சமுதாயத்தின் நலிவைபோக்கும் பெனிசிலின்

(o)

இதை நிலைநிறுத்த எத்தகைய தியாகத் தீயில் குதித்தெழவும் தயார்

(o)

தோழர் மா. இளஞ்செழியன் சொற்போர்

கோலார்தங்கவயல், டிச. 10—

“பரம ஏழைக்குக் கிடைத்த பெரியதோர் பணமுடிப்பைப்போல, கண்விழி இரண்டும் அற்றவனுக்குக் கிடைத்த ஒப்பற்ற வழி நடைத் துணைவன் போல, கடும்பசி கொண்டவன் எதிரே குவிக்கப்பட்ட அறுசுவை அமுதம்போல, தீராத நோயாளிக்குக் கிடைத்த அற்புத மருந்துபோல, சாதி மத வேத புராண இதிகாச நச்சாவுகளால் தீண்டப்பட்டுப் பன்னெடுங்காலமாக நலிந்துபோயிருக்கும் திராவிட சமுதாயத்தின் மோசகத்தையும் சோர்வையும் போக்கி, புத்துணர்ச்சியையும் புதுஎழுச்சியையும் ஊட்டும் அரியதோர் பெனிசிலின் இஞ்சக்ஷன், கம்யூனல் ஜி. ஒ! அந்த சமூக நீதி உத்தரவை நிலை நாட்டுவதற்காக எத்தகைய அறப்போரில் ஈடுபடவும், தியாகத் தீயில் குதித்தெழவும், திராவிட முன்னேற்றக் கழகம், தயார்! தயார்!”

என்று, சென்னை “போர்வாள்” ஆசிரியர் தோழர் மா. இளஞ்செழியன் பி. ஏ. ஆனர்ஸ், 10—12—50 ஞாயிறு மாலை 6 மணி அளவில், மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த கோலார் தங்கவயலில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டத்தில் உறுதியுரை புகன்றார்.

கூட்டத்திற்குத் தங்கவயல் தொழிலாளர்கள் ஆயிரக் கணக்கில் வந்து குழுமியிருந்தார்கள். அளவிறிசிக் கொடுமை—விஷம் போல் ஏறியிருக்கும் விலைவாசிகள்—பூமிக் கடியில் சென்று போபத்துக் கிடையே பணி புரிவதால் ஏற்படும் சோர்வு—மிகக் குறைந்த கூலி—மிக அதிக உழைப்பு—இவற்றின் காரணமாகத் தங்கவயல் தோழர்கள் தம் உடல் நிலை குன்றியிருந்தாலும் உள்ள உரம் சிறிதும் குறையவில்லை. ‘பெற்றால் திராவிட நாடு—இல்லையேல் இடுகாடு’ என்னும் வீரமுழக்கத்தின் நடமாடும் சின்னங்களாகவே இருந்தனர் அங்குத்திரண்டு குழுமியிருந்த தொழில் உலகத் தோழர்கள் அனைவரும்.

கூட்டம், தங்கவயல் உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. ஓங்கி உயர்ந்த கம்பத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கொடி, கம்பீரமாக அசைந்தசைந்து பறந்துகொண்டிருந்த காட்சி, காண்பவர் தம் கண்ணுக்கும் கருத்துக்கும் ஒருங்கே விருந்தளிக்கும் காட்சி நிறைந்ததாக இருந்தது.

கூட்டத்திற்குத் தோழர் என். சி. சபாபதி தலைமை வகித்தார்.

முதற்கண், மாணவமணிள் க. மா. பார்த்தசாரதி, வி. முத்துக்குமார் ஆகியோரும், உள்ளூர் தி. மு. க. செயலாளர்-இன எழுச்சியே உருவான இளங்காளை தோழர் டி. கே. சின்னதுரையும் இன்பத் திராவிடம் ஏன் பிரிய வேண்டும் என்பதை இனிதுற விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

பிறகு, தோழர் மா. இளஞ்செழியன், வகுப்புவாரி முறையின் இன்றியமையாமையைக் குறித்து சுமார் 1½ மணி நேரம் விளக்கவுரையாற்றினர்.

அப்போது அவர் குறிப்பிட்டதாவது :—

“என்ன பயன் தரும் கம்யூனல் ஜி. ஒ.? ஏன் அது நமக்கு? என்று பேசுகிற பேறறிவாளர்கள் சிலர் இவ்வூரில் இருப்பதாகக் கேள்விப் பட்டேன். அப்படிப்பட்டவர்களைப் பார்த்து அன்புடன் கேட்க ஆசைப் படுகிறேன்—கம்யூனல் ஜி.ஓ. என்ற விடிவெள்ளி தென்னாட்டு அரசியல் வானத்தில் தோன்றுவதற்கு முன்னால், தென்னாட்டில்சிறந்தஆங்கிலப் பேச்சாளர் யார்—மகாகனம் சீனிவாச சாஸ்திரி. ஆனால், இன்று?—சர்.ஆர்காட் இராமசாமிமுதலியார்! அன்று, சிறந்த தமிழ்ப் பேச்சாளர் யார்-சத்யமூர்த்திசாஸ்திரிஇன்று?-அறிஞர் அண்ணாத்துரை! அன்று, சிறந்த ஆங்கிலப் பத்திரிகாசிரியர், கஸ்தூரிரங்க அய்யங்கார். இன்று டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, அன்று சிறந்த தமிழ்ப் பத்திரிகாசிரியர், சி. ஆர். சீனிவாச அய்யங்கார் இன்று-‘தினசரி’ டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை! அன்று, ஒப்பற்ற பாடகர்-கிட்டப்பா, இன்று எம். கே. தியாகராஜ பாகவதர், அன்று, இணையற்ற வழக்கறிஞர்-சர் பி. எஸ். சிவசாமி அய்யர் அல்லது சர். அல்லாடிகிருஷ்ணசாமி அய்யர் இன்று-பாரிஸ்டர் எத்திராஜ் அல்லது ரங்கராமாநுஜம். அன்று, போற்றிப் புகழத்தக்க டாக்டர்-ரங்காச்சாரி! இன்று, குருசாமி முதலியார்! அன்று, தென்னாட்டுக் காங்கிரஸ் தலைவர்-மயிலை அய்யங்கார்! இன்று, காமராஜ் நாடார் அன்று, தென்னாட்டு அரசியல் நிபுணர்-சி. பி. இராமசாமி அய்யர் இன்று சர் இரத்தினசாமி. எப்படி வந்தது இப்படி ஒரு மாற்றம்? கம்யூனல் ஜி. ஓ. மட்டும் உருவாகாமல் இருந்திருந்தால் இப்படிப் பட்ட அற்புதமான மாறுதல் ஏற்பட்டிருக்குமா திராவிட நல் திருநாட்டில்?

“கம்யூனல் ஜி. ஓ. திராவிடசமுதாயத்தின் திகைப்பைத் தீர்க்க வந்த நல்லதோர் வழி காட்டி அந்த வழிகாட்டியை, ஒப்பற்ற கருவூலத்தை, இணையற்றதிருவிளக்கை இழக்க முடியாத இன்பத்தை அரிய உரிமை சாசனத்தை சட்டம் என்னும் கோல்கொண்டு நம்மிடமிருந்து தட்டிப் பறித்துக்கொள்ள எண்ணுகிறது. ஆரிய இனத்தில் உள்ள ஆதிக்கவாதிகளின் கூட்டம். ஆனல் அந்தக் குள்ள நரிகளின் கொட்டத்தை ஒடுக்கி, ஆணவத்தை அழித்து, அக்கிரமததை அடக்கி, அநீதியைப் பொசுக்கி, இப்போதிருப்பதைவிட இன்னமும் சிறந்தமுறையில் கம்யூனல் ஜி. ஓ.வை மாற்றி அமைத்து மறுகோலம் செய்ய, திராவிட முன்னேற்றக் கழகம், கொதிக்கும் உள்ளத்துடன், அறப்போர்க் களத்திலே இறங்கத் தயாராக இருக்கிறது.

“கம்யூனல் ஜி. ஓ. வின் எதிர்காலம், இப்போது டில்லி சுப்ரீம் கோர்ட்டாரின் கரங்களிலே இருக்கிறது. அவர்களின் தீர்ப்பு திராவிடப் பெருங்குடி மக்களின் நன்மைக்கு ஏற்றதாயின் நன்று நன்று எனக் கூறி அவர்கட்கு வணக்கம் கூறி நிற்போம். அவர்கள் தீர்ப்பு திராவிடர் நன்மைக்கு மாறுனதாக அமையுமாயின், கம்யூனல் ஜி.ஓவை ஒப்புக்கொள்ளும் விதத்திலே இந்திய அரசியல் திட்டம் திருத்தப் பட்டாகவேண்டும் என்பதற்கான அரியதோர் போராட்டத்தை, திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயம் தொடங்கும்.”

என்று குறிப்பிட்டுவிட்டு, மேலும் பேசுகையில், தோழர் இளஞ்செழியன் திராவிட முன்னேற்றக் கழகச் சமுதாய, பொருளாதார அரசியல் கோட்பாடுகளை மக்கள் மன்றத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தி வெற்றிக்கு ஆதரவு தருமாறு அன்புடன் வேண்டிக் கொண்டார்.

கூட்டத்தில் ஒரு சிலரால் கேட்கப்பட்ட ஏராளமான கேள்விகளுக்குப் பொருத்தமான விடைகள் தரப்பட்டன.

இரவு 9-மணி அளவில் கூட்டம் ‘திராவிடநாடு திராவிடருக்கே’ என்னும் நம் இதயகீதம் காற்றிலெல்லாம் கலந்துவரும் நாதமாகிய நிலையில் இனிது முடிவுற்றது.

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

15—12—50

கண்டவராயன்பட்டி (தேவகோட்டை)

தோழர் இரா. நெடுஞ்செழியன்

16—12—50

சோக்கனுதபுரம் (மானமது

தோழர்கள் இரா. நெடுஞ்செ யன், கவிஞர் கண்ணதாச குடந்தை எஸ். கே. சாமி, எ எஸ். இளங்கோ.

17—12—50

சென்னை (ராபின்சன் பார்க்)

தோழர்கள் எ. வி. பி. ஆசைத் தம்பி, பி. ராமசாமி, பி. வி. முத் சாமி.

திருச்செங்கோடு

தோழர்கள் சி. என். அண்ணு துரை எம். ஏ., என். கே. பி. வேல் ஈ. வி. கே. சம்பத்.

கீழச்சந்தைப்பேட்டை, (மதுரை)

தோழர்கள் எம். எஸ். சிவசாமி இரா. சு. தங்கப்பழம், எஸ். முத்து எஸ். சி.மாணிக்கம், எம். அய்யாச் சாமி.

ஆர்க்காடு

தோழர் சி. பி. சிற்றரசு.

திருச்சி

தோழர்கள் என். எஸ். இளங்கோ, எஸ். எஸ். மணி, எஸ். கே. சாமி, மு. கருணாநிதி.

18—12—50

சின்ன சேலம்

தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், ஈரோடு அப்பாவு.

விசாகையில் பட்டினிச் சாவு

விசாகபட்டினத்தை அடுத்து கடற்கரை யோரமுள்ள கிராமங்களில் பட்டினிச்சாவுகள் நேர்ந்திருக்கின்றன என்று காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர் ஒருவர் நேரில் பார்த்துவந்து கூறுகிறார்.

தோழர் எஸ். வி. லிங்கம்

தோழர் எஸ். வி. லிங்கம் அவர்கள் சில நாட்களாக உடல்நலமின்றியிருப்பதாகக் தெரிகிறது. அவர் தற்சமயம் திருச்சியில் தோழர் சங்கரன் அவர்கள் இல்லத்திலிருந்து உடல்நலனை கவனித்து வருகிறார்.

கழக நடவடிக்கைகள்

தூத்துக்குடி:—3-12-50 பி. ஜகநாதன் தலைமையில் நடந்த டை கழக நிர்வாகக் குழு கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தி. மு. கழக மத்திய நிலையத்திலிருந்து ரு பெரிய தமிழ் தினசரி நடத்த வண்டுமென்று தி. மு. கழக பொது சயலாளரிடம் கேட்டுக்கொள்ளப்படு து. பொங்கல் விழாவன்று கழக ப்பினர்களால் ஒரு நாடகம் நடத்த ண்டுமென்றும், அதற்கு ஆவன ய்ய எழுவர் கொண்ட உழைப்பு ஒன்றும் அமைக்கப்பட்டது. கழ தின் பார் ளைப்பிற்கு "வடக்கூர் . கழக உடற்பயிற்சி நிலையம்" று பெயரிட முடிவு செய்யப் —து.

தி. மு. கழக பொதுச் செயலாளர் என். அண்ணாதுரை மீதும் பெரி ர் மீதும் சர்க்காரால் தொடரப் ட்ட வழக்குகளில், 700 ரூ. அபரா அல்லது 6 மாத சிறை வாசம் று தீர்ப்பளிக்கப்பட்டது. இரு ரும் அபராதம் கட்ட மறுத்து சிறை சன்ற பின்னர், சர்க்காரால் தண் ைன ரத்து செய்யப்பட்டது. இப் போது மீண்டும் அவர்களிடம் அபரா தத்தை வசூலிக்க சர்க்கார் எடுத்திருக் ம் பலாத்கார நடவடிக்கையை இக் ட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

தோழர்கள் ஆசைதம்பி, கரியபெருமாள், தங்கவேலர் ஆகியோர்களை திருச்சி சிறையில் வைத்து மனிதத் தன்மையின்றி மொட்டையடித்து ட்டு, அதிகாரிகள் மயிர் விஷயத்தில் தலையிடவில்லை என்று அரசாங்கம் மாற்று அறிக்கை விடுவதை இக்கூட் ம் வன்மையாகக் கண்டிக்கிறது. உணவு நெருக்கடியை சமாளிக்க சர்க் கார் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் திருப்தியளிக்கவில்லை. எனவே தீவிர டவடிக்கைகள் எடுத்து குறைந்தபட் ம் 12 அவுன்ஸ் அரிசியாவது விநி யோகிக்கவும் கேட்டுக்கொள்ளப்படு றது.

* * *

சென்னை:—தோழமைக் கழகம் (10 வது வட்டம்) 3-12-50 ல் நடந்த தோழமைக் கழக பொது அங்கத்தினர் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானம் ஏக மனதாக நிறைவேறியது. 27-11-50 ல் திருச்சியிலுள்ள நாரண மங்கலத்தில் நடக்க இருந்த பொதுக் கூட்டத்திற்கு 15 நாட்களுக்குமுன் அரசாங்கத்திற்கு அறிவித்திருந்தும் அரசியலார் அங்கு பேச்சுரிமையைத் தடுக்க 144 பிறப்பித்ததை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. பேச்சுரிமையைக் காக்க தடையை மீறிய தோழர்களை றைக்குள் அடித்தும், அங்கு கூடி இருந்த பொது மக்களையும் மற்றவர்களையும் தடிகொண்டு மிருகத் தனமாக தாக்கியும், சிதறடித்தும் அநாகரீகமான முறையிலே அரசியலார் நடந்து கொண்டது குடியாட்சிக்கு முற்றும் முரணானது என்று அறிவுறுத்துவதுடன் வருந்துகிறது. முன்னேற்றக் கழக சார்பில் பேச்சுரிமையைக் காக்க களிப்புடன் சிறைக் கோட்டம் புகுந்த வீரத் தோழர்களையும், தடி அடிபட்ட தோழர்களையும் பாராட்டுவதுடன் அவர்களுக்கு தோழமைக் கழகம் வீர வணக்கத்தைச் செலுத்துகிறது.

* * *

கூடநகரம்:—3-12-50 ல் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் குழந்தைவேலு அவர்களின் இல்லத்தில் தோழர் ரங்கப்பா அவர்களின் தலைமையில் கூடிற்று. அதுசமயம் ஆர்வமுள்ள அன்பர்கள் அனைவரும் ஒரு மனப்பட்டு தி. மு. க. கிளை நிறுவப்பட்டது. செயற்குழு உறுப்பினர்களாக, செயலாளர் தோழர் கோவிந்தராசு, துணைச் செயலாளர் தோழர் ஒலியழகன், பொருளாளர் கூ. அ. தட்சணாமூர்த்தி, விளம்பர உறுப்பினர் இரா. கணேசன் மற்றும் ஆர். சக்கரவர்த்தி மு. ஏசையா, யோ. த. மணி, செயராமன், சின்னதுரை முதலிய தோழர்களை ஏற்படுத்தப்பட்டது.

* * *

உசிலம்பட்டி:—தி. மு. க. நிர்வாகக் கூட்டம் 3-12-50 ஞாயிறு மாலை 4 மணிக்கு அண்ணா பாசறையில் தோழர் பாக்கியராஜ் தலைமையில்ஜான் மாணிக்கம் திராவிட பண்பாட கூட்டம் ஆரம்பம் ஆகியது. அது சமயம் 1951 க்கு புது நிர்வாகஸ்தர்கள் கீழ்கண்டவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

செயலாளர் உ. ஏகநாதன், துணைச் செயலாளர் க. மா. வீரணன், பொருளாளர் கே. எம். ஜெயராமன், விளம்பர உறுப்பினர் பி. சிவன்காளை, கே. என். பேயத்தேவர், சேது ராமசாமி, மதுரை மாவட்ட உறுப்பினர் ஹரிராமன், இரா. கந்தசாமி, செயற்குழுவினர் இரா. ஏகநாதன், சண்முகவேல் பெரியகருப்பன், சுப்பிரமணியம் எம். பி. கருப்பத்தேவர், திருவண்ணமலை, பாக்கியராஜ், பொன்னையா. மாணிக்கம், வீரணன். நிதி வசூல் குழுவினர் அழகு சிங்கம், மாயத்தேவர், வெ. சுப்பிரமணியம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பின் மறைமலை அடிகள், சேலம் இராமசாமி இயற்கையெதியதற்கு மரியாதை தெரிவித்துகொண்டும், சென்னை, குன்றத்தூரில் நடந்த தடியடி தர்பாரை கண்டித்தும் ஏகமனதாகதீர்மானம் நிறைவேறியது.

* * *

தேவமண்டலத்தில்:—இவ்வூர் தி. மு. க.பொதுக்கூட்டம் 8-12-50 நடைபெற்றதுகாலையில் செயலாளர் கொடியேற்றுவித்தார் தோழர் டி. பி.கேசவன் தலைமைவகித்தார். தோழர்ஆசைப்பிள்ளை அவர்களும் தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்களும் சொற்பொழிவாற்றினர்கள் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடினர்.

* * *

ஈரோடு:—5-12-50 எஸ். ஆர். சந்தானம் தலைமையில் தோழர்கள் இரா. பெருமாள். மதரூஸ் என். பி. பாலகுரு, எஸ். அப்பாவுஆகியோர்கள் நகர் காங்கிரஸ் கமிட்டியாரின் அறியாமையை எடுத்து கூறிய பிறகு சி. பி. சிற்றரசு மக்களின் கைத் தட்டலின் இடையே சுமார் 1-30 மணி நேரம் காங்கிரஸின் பிற்போக்கின் நிலைமையையும் மந்திரிகளின் மதியற்ற தன்மையையும், காமராஜரின் கலக்கங்களையும் நாட்டிலே, உள்ள பசி பட்டினியின் தாண்டவத்தை எடுத்துக்கட்டி மாலை 9-30 மணிக்கு முடித்தார்.

திருந்திய மணம்

30—11—50 காலை 8-30 மணிக்கு உள்ளிக்கோட்டை தி.மு. கழக செயலாளரும் பஞ்சாயத்து போர்டு தலைவருமான கோ. அருணாசலம் அவர்கள் தலைமையில் தோழியர்சுலோசனாவுக்கும், தோழர் தங்கவேலருக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது.

சென்னையில் தமிழர் திருநாள்

தமிழர் திருநாள் விழாவை வட சென்னை ராபின்சன் பூங்காவில் மூன்று தினங்கள் அதி விமரிசையாக நடத்தவும், முதல் நாள் காலை தமிழர் திருநாள் முக்கியத்தை விளக்க 3-வது வட்டம், 4-வது வட்டங்களில் பெரிய ஊர்வலம் இன்னிசையுடன் நடத்தவும், மேற்படி விழாவில் கலந்துகொள்ள தோழர்கள்:—கே. ஏ. பி. விஸ்வநாதம், அறிஞர் அண்ணாதுரை, மு. வரதராசனார், சினிமா டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி, நெடுஞ்செழியன், கே. ஆர். ராமசாமி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, விருதை இலக்குவனார், வி. வி. ராமசாமி ஆகியோர்களை அழைப்பதெனவும், மேற்படி காரியங்களை நிறைவேற்ற வட சென்னை தமிழர் திருநாள் விழாக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கமிட்டியின் உருப்பினர் பின் வருமாறு:—தலைவர்: பி. இராமசாமி செயலாளர்கள்-பி. வி. முத்துசாமி, என். பி. டி. திராவிடமணி-அமைப்பாளர் வி. கந்தசாமி, பொருளாளர் எஸ். மாரிமுத்து மற்றும் ஐந்து கமிட்டி மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்று அமைப்பாளர் வி. கந்தசாமி எழுதுகிறார்.

பேவின்-எகிப்து மந்திரி சம்பாஷணை நீடிப்பு

பாதுகாப்பு பிரச்னைகள் விஷயமாக ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களைத் தீர்க்கும் முறையில் பிரிட்டிஷ் அயல் நாட்டு மந்திரி பெவினும் எகிப்து அயல் நாட்டு மந்திரி முகம்மது ஸலா எல்தின்பேக்குக்குமிடையே நீடித்த சம்பாஷணைநடைபெற்று வருகிறது.

பேச்சு வார்த்தைகள் மிக சௌஜன்ய முறையிலேயே நடைபெற்று வருகின்றனவாம். இந்தசம்பாஷணை விட்டுவிட்டு பல வாரங்கள் தொடர்ந்து நடை பெறலாம் எனத் தெரிகிறது.

சவர்க்கார் மீதுள்ள தடை

தோழர் சவர்க்கார் மீது விதித்துள்ள தடையைஆட்சேபித்துஅவரது மகன் பம்பாய் ஹைகோர்ட்டில் ஒரு மனு தாக்கல் செய்திருக்கிறார்.

தடுப்பு சட்டத்தின் கீழ் விடுதலை செய்யப்பட்ட சவர்க்கார் ஒரு ஆண்டு காலத்துக்கு அல்லது அடுத்த பொதுத் தேர்தல் வரை அல்லது இந்தியா எந்த யுத்தத்திலாவது சம்பந்தப்பட நேரிட்டால் அதுவரை அரசியலில் ஈடுபடக் கூடாது என்பதாகும்.

சென்ற அக்டோபர் மாதம் வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுவிட்டதால் அத்துடன் சவர்க்கார் அளித்த வாக்குறுதி காலாவதியடைந்துவிட்டதென்பது மனுவில் கண்டுள்ளது. ஆகவே, பூனாவில் நடைபெறும் இந்துமகா சபை மாநாட்டில் சவர்க்கார் கலந்து கொள்ள அனுமதிக்கவேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளன. தடையை நீக்கும் சம்பந்தமாக பம்பாய் அரசாங்கத்தின் அபிப்பிராயத்தை ஹைகோர்ட்டார் கேட்டுள்ளனர். ஆகவே, வழக்கை அடுத்த வெள்ளிக்கிழமை வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இனி நடப்பவை

திருச்சச்கோடு:- திராவிட முன்னேற்றக் கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் 17—12—50 ஞாயிறு மாலை 6-மணிக்கு இவ்வூர் 40-கால் மண்டபத்தின் முன் பொதுக்கூட்டம் நடைபெறும். கூட்டத்திற்கு மாகாண தி. மு. கழகப் பொதுக்குழு உறுப்பினரும், சேலம் மாவட்டக் கழகத் துணைச் செயலாளருமாகிய.தோழர் என். கே. பி. வேல் அவர்கள் தலைமை வகிப்பார் தோழர்கள் சி. என். அண்ணாத்துரை, ஈ. வி. கே. சம்பத் அவர்களும், "தற்கால அரசியலும். திராவிட முன்னேற்றக் கழகமும்" என்பதுபற்றிசொற்பொழிவாற்றுவார்கள். அன்று மாலை 4-மணிக்கு கீழ ரத வீதியிலிருந்து ஊர்வலம் புறப்படும்.

* * *

வடசென்னை ராபிசன்பார்க்கில் 17-12-50 ஞாயிறு மாலை 5 மணிக்கு வடசென்னை 3-வது வட்ட தி. மு. கழக சார்பாக தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பி. இராமசாமி, பி. வி. முத்துசாமி ஆகியோர் பேசுவார்கள்.

* * *

ஆற்காடு:—17-12-50 சி. பி. சிற்றரசு மற்ற இயக்கத் தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

திருச்சி:—பெரியகடை வீதி தி. மு. க. கிளைக்கழக ஆண்டுவிழா 17-12-50 காலை திருச்சி தேவர் ஆலிலும், மாலை பொதுக்கூட்டம் டவுன் ஆல் மைதானம் முன்பு நடைபெறும். அதுசமயம் தோழர்கள் என். எஸ். இளங்கோ, எஸ். எஸ். மணி, எஸ். கே. சாமி, மு. கருணாநிதி பேசுவார்கள்.

* * *

சொக்கநாதபுரம்:—16-12-50 சனிக்கிழமை அன்று மாலை நான்கு மணிக்கு வழக்கறிஞர் தோழர் க. இரா. சத்தியேந்திரன் அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கவிஞர் கண்ணதாசன், குடந்தை எஸ். கே. சாமி, என். எஸ். இளங்கோ ஆகியோர் "குறி வைக்கிறார்கள்" என்பதைப் பற்றி விளக்கிப் பேசுவர்!

'திராவிடத்தென்றல்'

(திராவிடர் திங்கள்வெளியீடு)

சிந்திக்கத் தூண்டும் கட்டுரைகள், கவிதைகள், சிறு கதைகள், எதிர்ப்புக்கு மறுப்பு, கேள்வி-பதில், முதலிய பகுதிகளுடன் பொங்கல் புது நாளிலிருந்து போர் முரசு கொட்ட வருகிறது! 40 பக்கங்கள்! விலை 2 அணாதான்!!

விற்பனையாளர்கள் தேவை

விவரங்கட்கு:-திராவிடத்தென்றல் ஆராய்ச்சிப் பதிப்பகம் பொள்ளாச்சி S. I.

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-I.